இந்தி எதிர்ப்புப் போர் என்ற தலைப்பில் வருகின்ற ஜூன் 23ஆம் தேதி சைதாப்பேட்டை கலைஞர் வளைவில் காலை 9 மணி அளவில் நடைபெற விருக்கும் ஆர்ப்பாட்டம் குறித்து கலந்தாலோசிக்க நடைபெற்ற சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா அவர்கள் தலைமையில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.. இளங்கோவன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை சோழ ராஜன், த.அமுதரசன், சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் தி.மு.க மாணவர் அணி செயலாளர் திருமதி. ஈரோடு வீரமணி பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார்.

நீட் கொடுமை - கோவையில் 19 வயது மாணவி தற்கொலை!

ஜூன் 23ல் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக

தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டனப் போராட்டம்!

மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி அறிவிப்பு!

கோவை,ஜூன்.20-

கோவையில் நீட் தேர்வு பயம் மற்றும் பயிற்சி மையக் கட்டண சுமை காரணமாக 19 வயது மாணவி அனுகீர்த்தனா தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது. இது ஒன்றிய பாஜக அரசு நடத்தும் தொடர் கொலை என்று தி.மு.க. மாணவர் அணி காரசாரமாக குற்றம் சாட் டியுள்ளது. ஜூன் 23 அன்று ஒன்றிய பாஜக அர சுக்கு எதிராக தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன போராட்டம் நடைபெற வுள்ளது.

செய்தியாளர்களிடம் கழக மாணவர் அணி செய லாளர் ஈரோடு ஜெ.வீர மணி கூறியதாவது :

நீட் தேர்வை ரத்து செய் யக் கோரி சட்டமன்றத்தில் இரண்டு முறை மசோதா நிறைவேற்றப்பட்டு, ஒன் றிய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. ஆனால், அதற்கு செவி சாய்க்காத ஒன்றிய பாசிச பாஜக அரசு, தொடர்ந்து நீட் தேர்வை திணித்து வரு கிறது. இதன் விளைவாக, இன்று கோவையில், 19 வயதான அனுகீர்த்தனா என்ற மாணவி பலியாகி யுள்ளார். இது ஒன்றிய பாசிச பாஜக அரசு தொடர் கொலை அப்ப டின்னு தான் சொல்லணும், ஏன்னா நம்ம அரியலூர் அனிதா மரணத்தின் போதே, எங்களது கழக இளைஞர் அணி செயலா ளர், தமிழ்நாட்டில் எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உண்ணா நோன்பு இருந்து கடுமையான போராட்டங் களை முன்னெடுத்தார். ஆனால், இந்த பாசிச பாஜக அரசு எதற்கும் செவிசாய்க்காமல் தொடர்ந்து மாணவர்க ளின் உயிரோடு விளை யாடி வருகிறது.

கோச்சிங் சென்டர் வியாபாரம் : தரமான கல்வி, தரமான மருத்துவர் கள் என்று கூறிக்கொண்டு கொண்டுவரப்பட்ட நீட் தேர்வில், பூஜ்ஜியம் மற் றும் மைனஸ் மதிப்பெண் எடுத்தவர்கள் கூட மருத்து வராகலாம் என்ற அவல நிலை உள்ளது. அப்படி யென்றால், இந்த நீட் தேர்வு தரமான மருத்துவர் களை உருவாக்கவா? அல் லது கோச்சிங் சென்டர் களை நடத்துபவர்களின் கல்லாவை நிரப்பவா? தற்கொலை செய்து கொண்ட அந்த மாணவி தன்னுடைய தந்தைக்கு கோச்சிங் சென்டரில் 10 லட்சம் ரூபாய் வரை செல வாகிவிட்டதே என்று கதறி அழுது, மன உளைச்சலுக்கு ஆளாகித்தான் இந்த விப ரீத முடிவை எடுத்துள் ளார். இது வேண்டாம் இதை மாணவர்கள் தவித்து விட வேண்டும்.

உலகத்தரம் வாய்ந்த தமிழக மருத்துவம் : ஏற்க னவே செமொழிக் காவ லர், முத்தமிழறிஞர் கலை ஞர் அவர்கள் கொண்டு வந்த சமச்சீர் கல்வி முறை மிகத் தரமானதாக உள் ளது. உலகமே போற்றும் வகையில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை உள் ளிட்ட பல்வேறு உலகத்த ரம் வாய்ந்த மருத்துவ சிகிச் சைகளுக்கு வெளிநாட்ட வர் தேடி வருவது தமிழ் நாட்டிற்கு தான். இத்த கைய சூழலில், நீட் என்ற ஒரு போலியான முகமூ டியை அணிந்து கொண்டு, வினாத்தாள் விற்பனை செய்வது, கோச்சிங் சென் டர்களுக்கு ஆள் சேர்ப்பது என ஒரு கார்ப்பரேட் பிசி னஸ் மைண்டோடு ஒன் றிய பா.ஜ.க. அரசு செயல் பட்டு வருகிறது. ஆரிய கூட்டம் நம்மை 2,000 ஆண்டுகள் அடிமைப்ப டுத்தி வைத்திருந்ததை போல, மீண்டும், மீண்டும் நீட் என்ற பெயரில் நம் பிள்ளைகளை காவு வாங் கக்கூடிய இந்த நீட்டை ரத்து செய்ய வேண்டும்.

ஏற்கனவே சிபிஎஸ்இ 9ஆம் வகுப்பில் மும்மொ ழிக் கொள்கையை திணிப் பதற்கு எதிராக வரும் ஜூன் 23ஆம் தேதி தி.மு.க. மாணவர் அணி சார்பில் போராட்டம் அறிவிக்கப் பட்டுள்ளது. தற்போது நீட் தேர்வால் நடந்துள்ள இந்த கொடூர மரணத்தை அடுத்து, வரவிருக்கும் ஜூன் 23 அன்று போராட்ட களத்தில் நீட் தேர்வை தடை செய்யக் கோரியும், ஒன்றிய பாஜக அரசை கண்டித்தும் தி.மு.க. மாண வர் அணி சார்பில் மிக வலு வான முழக்கங்கள் முன்னெடுக்கப் படும்.

ஒன்றிய பாஜக அரசை எதிர்த்து தி.மு.கழகத் தலை வர், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனை யின் படி, கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ் நாடு எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர் களின் வழிகாட்டுதலோடு தி.மு.க. மாணவர் அணி தொடர்ந்து வீரியமாக போராடும் என்று கழக மாணவர் அணி செயலா ளர் ஈரோடு ஜெ.வீரமணி தெரிவித்தார்.

இதில் கழக மாணவர் அணி துணைச் செயலாளர் கோகுல், மாவட்ட மாண வர் அணி அமைப்பாளர் அந்தோணி ராஜ், துணை அமைப்பாளர்கள் சிவகு மார், ராஜ் திலக், பகுதி அமைப்பாளர்கள் சுதன், வருன் விஷ்ணு, முகமது அப்துல்லா உள்பட மாண வர் அணி நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி மற்றும் மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி கலந்துகொண்டு நீட் தேர்வு அச்சத்தால் கோவையில் 19 வயது மாணவி தற்கொலைக்கு காரணமான ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து வருகிற ஜூன் 23ல் தேதி சென்னையில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி, மாணவர் அணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என ஆலோசனைகளை வழங்கினார்.

தி.மு.க. மாணவர் அணி சார்பில்

ஜூன் 23 - சென்னையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

இராணிப்பேட்டை மாவட்டக் கழகத்தினருக்கு - மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி வேண்டுகோள்!

இராணிப்பேட்டை, ஜூன் 20 -

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க செயலா ளர் ஆர்.காந்தி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்க ளின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், இளந் தலை வர் அவர்களின் வழிகாட் டுதலுடன் "தமிழ்நாட்டின் கல்வி உரிமையை பறிக் கும் ஒன்றிய பா.ஜ.க அர சின் PM shri திட்டம், CBSE பள்ளிகளில் ஒன்பதாம்

வகுப்பில் மாணவர்க ளுக்கு மும்மொழித் திணிப்பை கண்டித்தும் உயர் கல்வித்துறையை முடக்கும் விக்சித் பாரத் சிக்க்ஷா அதிஷ்தான் (VBSA உயர் கல்விக்கான ஒரே ஆணையம்) மசோதாவை திரும்பப் பெறக் கோரி யும்" திமுக மாணவர் அணி சார்பில் வரும் ஜூன் 23 ஆம் தேதி அன்று காலை 10 மணியளவில் சென்னை, சைதாப் பேட்டை கலை ஞர் வளைவு அருகில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

தமிழ்நாடு மாணவர்க ளின் கல்வி உரிமையை யும், நமது மாநிலத்தின் இறையாண்மையையும் காக்க வேண்டியது நமது தலையாய கடமை ஆகும்.

எனவே இராணிப் பேட்டை மாவட்டத்திற் குட்பட்ட நகர ஒன்றிய பேரூர் மாணவர் அணி நிர் வாகிகள் மற்றும் மாணவர் களை பெரும் திரளாக பங் கேற்க செய்து கருப்பு சட்டை அணிந்து கையில் இரு வண்ண கழக இந்த கொடியேந்தி திரண்டு ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெற செய்யுமாறு அன்பு டன் கேட்டுக்கொள்கி றேன்.

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

'மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் பாதுகாக்கப்படும்' என பெயரளவுக்கு அறிவிப்பு!

ஆளுநர் உரைக்கு - தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் ரெ. தங்கம் கண்டனம்!

சென்னை, ஜூன் 20 -

சட்டப்பேரவை ஆளு நர் அறிக்கையில் மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் பாதுகாக்கப்படும் என பேயரளவில் அறிவித்த அர சுக்கு தி.மு.க. மாற்றுத்திற னாளிகள் அணி மாநில தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன் னேற்ற சங்க மாநில தலை வர் ரெ. தங்கம் கண்டனம் தெரிவித்து அறிக்கை விடுத் துள்ளார்.

அவரது அறிக்கை வரு மாறு,

புதிய அரசு பொறுப் பேற்றவுடன், தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் அவர்கள் கட்டுப் பாட்டின் கீழ் மாற்றுத்திற னாளிகள் நலத் துறை உள்ள நிலையில், தலை மைச் செயலகத்திற்கு தினந்தோறும் ஆயிரக்க ணக்கான மாற்றுத்திறனா ளிகள் தங்களது கோரிக் கைகளை நிறைவேற்ற கோரி, துறை சார்ந்த அமைச்சரிடமும், துறை சார்ந்த அதிகாரிகளிடமும் மனு அளிக்க கோட் டைக்கு தினந்தோ றும் வரும் மாற்றுத்திறனாளி களை

காவல்துறை துணை கொண்டு அவர்களை தலைமைச் செயலகத்திற் குள் நுழைய விடாமல் தடுத்து நிறுத்தி துன்புறுத்தி வெளியே துரத்தும் இந்த அரசு,

"மாற்றுத்திறனாளிக ளின் உரிமையை" எப்படி பாதுகாக்கும், இதற்கு சட் டமன்ற ஆளுநர் உரையில் ஒரு அறிக்கையா? என் பதை நினைத்து லட்சக்க ணக்கான மாற்றுத் திறனா ளிகள் வேதனையில் உள்ளனர்!

எனவே, முன்னாள் முத லமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் எப் படி, மாற்றுத்திறனாளிகள் நிபந்தனை இன்றியும், காவல்துறை தொந்தரவு இன்றியும், எளிய முறை யில் கோட்டைக்குச் சென்று துறை சார்ந்த அமைச்சர்களிடமும், துறை சார்ந்த அதிகாரியிட மும் அணுகி தங்களுடைய கோரிக்கை மனுக்களை அளித்தார்கள், அதற்கு அதிகாரிகளும் தீர்வும் கண்டு நிறை வேற்றினார் கள்.

அதேபோல முதலமைச் சர் ச.ஜோசப் விஜய் அவர் கள், மாற்றுத்திறனாளிகள் சமூகம் எவ்வித கட்டுப்பா டும் இன்றியும், நிபந்தனை இன்றியும், சிரமமின்றி கோட்டைக்கு உள்ளே சென்று துறை சார்ந்த அமைச்சர்களிடமும், துறை சார்ந்த அதிகாரிகளி டமும் நேரில் சந்தித்து தங் களின் மனு அளிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

மேலும், நகர்புற வாழ் விட மேம்பாட்டு வாரியத் தின் மூலம் மாற்றுத்திறனா ளிகளுக்கு ஒதுக்கப்படும் குடியிருப்புகளை முற்றி லும் இலவசமாக வழங்கிட வேண்டும், தாங்கள் தேர் தல் அறிக்கையில் அறி வித்த மாதாந்திர உதவித் தொகை ரூ.2500/- வழங்க வேண்டும். 10 ஆண்டுக ளுக்கு ஒரு முறை வழங்கப் படும் இணைப்பு சக்கர வண்டியினை 6 ஆண்டுக ளுக்கு ஒரு முறையாக இணைப்பு சக்கர வண்டி வழங்கப்பட வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளின் மகள் /மகன் ஆகியோ ருக்கு உள் இட ஒதுக்கீட் டின் அடிப்படையில் மருத் துவ படிப்பு, பொறியாளர் படிப்பு மற்றும் கலை கல் லூரிகளில் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும், சாலை யோரங்களில் பெட்டிக் கடை (பங்க்) வைப்பதற்கு அனுமதி உள்ளிட்ட பல் வேறு கோரிக்கைகளை இந்த அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்,

வயது தளர்வு காரண மாக 43, 44 வயதுகளில் அரசுப் பணியில் சேரும் மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களின் ஒய்வு பெரும் வயதை 65ஆக உயர்த்தி அரசாணை வெளியிட வேண்டும் உள்ளிட்ட மேற்படி கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கேட் டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கழக மாற்றுத் திறனாளிகள் அணியின் மாநில தலைவரும், தமிழ் நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில தலைவர் ரெ.தங் கம் தெரிவித்துள்ளார் .

ரூ.1 கோடி மோசடி செய்த த.வெ.க. நிர்வாகி

பாதிக்கப்பட்டவர்கள் தீக்குளிக்க முயற்சி!

ஈரோடு எஸ்.பி அலுவலகத்தில் பரபரப்பு!

ஈரோடு, ஜூன் 20 -

ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி நேரு பஜார் ராஜா ராணி டிரே டர்ஸ் உரிமையாளர் மனோகரன் (48). இவர் மனைவி ஷீலா, மகன்கள் பார்த்திபன், நளின் ஆகி யோருடன் நேற்று மதியம் ஈரோடு எஸ்.பி. அலுவல கத்துக்கு மனு அளிக்க வந் தார். அப்போது மனோக ரன், கேனில் இருந்த மண்ணெண்ணெயை திடீ ரென்று தன் உடல் மேலும், மனைவி, மகன்கள் மீதும் ஊற்றினார்.

அதிர்ச்சியடைந்த போலீசார் உடனடியாக நான்கு பேரையும் மீட்டு அவர்கள் மீது தண்ணீரை ஊற்றினர். பின்னர் விசார ணைக்காக, ஈரோடு டவுன் டி.எஸ்.பி. அலுவலகத் துக்கு அழைத்து செல்லப் பட்டனர்.

மனோகரன் அளித்த புகார் மனுவில் கூறியி ருந்தாவது:

நான் அரிசி வியாபாரி. 2025 மே மாதம், ஈரோட்டை சேர்ந்த நந்த கோபால், தேவி, சதீஷ் ஆகி யோர் என்னிடம் ரூ.19 லட்சத்துக்கு அரிசி கொள் முதல் செய்தனர். அப் போது, ரூ.4 லட்சம் கொடுத்தனர்.

ஒரு வாரத்தில் மீதி உள்ள ரூ.15 லட்சத்தை கொடுப்பதாக தெரிவித்த னர். ஆனால், இதுவரை பணம் கொடுக்கவில்லை.

இதுகுறித்து பல முறை புகார் அளித்தும் நடவ டிக்கை இல்லை. இவர்கள் மளிகை பொருட்கள் மொத்த வியாபாரம் என்ற பெயரில் தவெக வக்கீல் அணி மாவட்ட செயலாளர் அருண் தலைமையில் பல போலியான ஜி.எஸ்.டி. எண்களை எடுத்து கொண்டு என்னை போன்ற பல வியா பாரிகளை ஏமாற்றி மோசடி செய்து வருகின்றனர். அவர் கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ் வாறு மனுவில் கூறப்பட்டி ருந்தது. இதேபோன்று, திருச்சி பாப்பாகுறிச்சி தேவி பாஸ்கர் ரைஸ் மில் உரிமையாளர் ராஜா அளித்த புகார் மனு வில், "ஈரோட்டை சேர்ந்த நந்தகோபால், தேவி, லோகு, பகதூர் பாஷா ஆகி யோர் 2024ம் ஆண்டு கணேஷ் டிரேடர்ஸ் பெய ரில் ரூ.1 கோடியே 3 லட் சத்திற்கு என்னிடம் அரிசி கொள்முதல் செய்தனர்.

ரூ.18 லட்சம் மட்டுமே கொடுத்தனர். மீதி ரூ.85 லட்சம் இதுவரை வழங்க வில்லை. தவெக வக்கீல் அணி செயலாளர் அருண் தலைமையிலான இக்கும் பல் பல போலி ஜி.எஸ்.டி. எண்களை எடுத்து வியாபா ரி களை ஏமாற்றி மோசடி செய்து பணம் சம்பாதிக் கின்றனர்.

இவர்கள் மீது உரிய நட வடிக்கை எடுக்க வேண் டும் என கூறி உள்ளார்.



கோவை மாவட்ட பாரம் தூக்கும் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் பொள்ளாச்சி ஊஞ்சவேலாம்பட்டி சிமெண்ட் குடோன் கிளை உறுப்பினர் காளிமுத்து மரணம் அடைந்தை ஒட்டி அவருடைய குடும்பத்திற்கு நகர தலைமை சங்கத்தின் சார்பாக கொளரவத் தலைவர் தென்றல் செல்வராஜ் தலைவர் சிராஜிதீன் ஆகியோர் நிதியுதவி செய்தனர். உடன் துணைச் செயலாளர் நாச்சிமுத்து கரியாம்பட்டி செல்வராஜ் மற்றும் கிளை நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மீஞ்சூர் மு. கேசவன்
ஜூன் 20 (2019)

கழகம் துவங்கிய காலத்திலேயே, கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பொன்னேரி வட்டத்தில் கழகத்தை துவங்கியவர்.

பொன்னேரி வட்டக் கழகச் செயலாளராக மூன்று முறையும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் போன்ற மும்முனைப் போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.